# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க, அல்ஹாஜ் எஸ். எம். எம். ஹுசைன் தரும நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, திசெம்பர் மாதம் 24 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2009 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க, அல்ஹாஜ் எஸ். எம். எம். ஹுஸைன் தரும நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஒ. கூட். 30/2007*

**அல்ஹாஜ் எஸ். எம். எம். ஹுஸைன் தரும நம்பிக்கைப் பொறுப்பினை கூட்டிணைப்பதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*முன்னுரை.*

“அல்ஹாஜ் எஸ். எம். எம். ஹுஸைன் தரும நம்பிக்கைப் பொறுப்பு” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நம்பிக்கைப் பொறுப்பொன்று அது எந்தக் குறிக்கோள்களுக்காகத் தாபிக்கப்பட்டதோ அந்தக் குறிக்கோள்களையும் பயனுற நிறைவேற்றிக்கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் 1982 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் :

சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக இருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க, அல்ஹாஜ் எஸ். எம். எம். ஹுஸைன் தரும நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*அல்ஹாஜ் எஸ். எம். எம். ஹுஸைன் தரும நம்பிக்கைப் பொறுப்பைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “நம்பிக்கைப் பொறுப்பு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) “அல்ஹாஜ் எஸ். எம். எம். ஹுஸைன் தரும நம்பிக்கைப் பொறுப்பின்” தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களான அல்லது சொல்லப்பட்ட நம்பிக்கைப்

பொறுப்பாளர் சபை உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுவர்களான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "அல்ஹாஜ் எஸ். எம். எம். ஹுஸைன் தரும நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை" என்ற பெயரின் கீழும், மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன், அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர) பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் இலங்கை முஸ்லிம் மாணவ, மாணவியருக்கு உதவி வழங்குதல் ;

(ஆ) புலமைப் பரிசில்கள் வழங்குதலும், வாழ்க்கைத் தொழில் வழிகாட்டலை வழங்குதலும் ஏதேனும் பல்கலைக் கழகத்தில், நிறுவனத்தில் அல்லது தொழிற்பயிற்சி நிறுவகத்திலுள்ள இலங்கை முஸ்லிம்களின் கல்விசார், தொழினுட்ப மற்றும் உயர்தொழில்சார் தேர்ச்சிகளை முன்னெடுத்துச் செல்லுதலும் ;

(இ) இலங்கை முஸ்லிம் மாணவர்களின் தொழினுட்பக் கல்வி உட்பட அவர்களின் கல்வி அபிவிருத்திக்கு வழிகாட்டுதலும் உதவுதலும் ;

(ஈ) இலங்கையிலுள்ள ஏதேனும் இஸ்லாமிய நிறுவனத்தை, பள்ளிவாசலை அல்லது அரபுப் பாடசாலையைத் தாபிப்பதற்கு, பழுதுபார்த்தலுக்கு அல்லது புதுப்பித்தலுக்கு ஏற்பாடு செய்தலும் அதில் உதவி புரிதலும் அத்துடன் அத்தகைய நிறுவனங்களின் பராமரிப்புக்கென ஒழுங்கான பங்களிப்புகளை ஏற்பாடு செய்தலும்;

(உ) வறுமை நிவாரணத்திற்கு ஏற்பாடு செய்தலும் ஏதேனும் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு உதவுதலும் ; அத்துடன்

(ஊ) மேற்குறித்த நோக்கங்களுக்காக நிதி, நன்கொடைகள் என்பவற்றைச் சேகரித்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. கூட்டுத்தாபனம் இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வளங்களிலிருந்து காசாகவோ பொருள்களாகவோ மானியங்களையும் அன்பளிப்புகளையும் நன்கொடைகளையும் பெற்றுக் கொள்ளல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஊக்குவிப்பதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் மேற்கொள்ளுதலும் நிறைவேற்றுதலும் ;

(இ) வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், தொழிற்படுத்துதல் அத்துடன் மூடி விடுதல் ;

(ஈ) பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றிப் பணத்தை முதலீடு செய்தல், கடனெடுத்தல் அல்லது திரட்டுதல் ; அத்துடன்

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை ஈடுபடுத்துதலும் தொழிலுக்கமர்த்துதலும் பதவி விலக்குதலும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய முகாமைச் சபையொன்றினால் (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கும் நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர்

கள் சபையின் உறுப்பினர்கள் முதலாவது முகாமைச் சபையின் உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) சபை உறுப்பினர் ஒருவரின் இறப்பினால், இயலாமையால் அல்லது பதவி துறத்தலினால் ஏற்படக்கூடிய வெற்றிடத்தை கூட்டுத்தாபனத்தின் விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு நிரப்புவதற்கான தத்துவத்தை சபை கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) சபையின் ஏதேனும் கூட்டத்தில் வாக்குப் பெரும்பான்மை யுடன் சபையின் கூட்டங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கைமுறை மற்றும் சபையின் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் என்பன உட்பட பின்வரும் எல்லா அல்லது எவை யேனும் கருமங்களுக்காக இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத் துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்தல், அவர்களின் நியமனம் அத்துடன் அவர்களை விலக்குதல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளுதல், உறுப்பாண்மைக் கைவாங்குதல், அவர் களை விலக்குதல் ;

(இ) சபையினதும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர் களினதும் முகவர்களினதும் சேவையாளர்களினதும் கடமைகளை நிறைவேற்றுதல் ;

(ஈ) அலுவல்களை நிறைவேற்றுவதில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள் ; அத்துடன்

(உ) நம்பிக்கைப் பொறுப்பின் நிதிகளை முகாமை செய்தலும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தின் விதிகள் அதேபோன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அதற்கெது வும் சேர்த்துக்கொள்ளப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப் படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

**7**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் இருக்கின்றதான நம்பிக்கைப் பொறுப்பின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் உருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும் என்பதுடன் நம்பிக்கைப் பொறுப்புக்கு வருமதியாகவுள்ள எல்லா தனிசுகளும் ஒப்பப்பணங்களும் நன்கொடைகளும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

நம்பிக்கைப் பொறுப்பால் செலுத்தப் படற்பாலனவும் நம்பிக்கைப் பொறுப்புக்குச் செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்.

**8**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் மரணசாதன ஆதன கையளிப்பு, கொடை, அளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை என்ற வகையாக இதுகாலவரை அல்லது இதன்பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் சபை தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் இலங்கையில் வைப்பிலிடுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**9**. (1) சபை கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்டதும் செலவிடப்பட்டதுமான பணத்தின் தகுந்த கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் குறைந்த பட்சம் ஒருமுறையாவது பரிசீலனை செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் வருமான, செலவினக் கணக்கினதும் ஐந்தொகையினதும் செவ்வை கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரால் அல்லது கணக்காய்வாளர்களால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது–

(அ) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தின் உறுப்பினராகவுள்ளரும், கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக அந்நிறுவனத்தால் அல்லது பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள ஒருவர்; அல்லது

(ஆ) ஏதேனும் கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவனத்தின் பேரவையினால், கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**10.** கூட்டுத்தாபனமானது, 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய, கொள்வனவு, மானியக்கொடை, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக் கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் மேற்சொல்லப்பட்ட விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையாள கூட்டுத்தாபனமானது முழுத்தத்துவம் கொண்டிருத்தலும் வேண்டும்.

*இலச்சினையைப் பொறித்தல்.*

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினை சபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான எச்சாதனத்திலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக, அச்சாதனத்தில் தங்கள்

பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்ப மிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மேல் எஞ்சியிருக்கும் ஆதனம்.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல், அதன் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் கொடுத்துத் தீர்க்கப்பட்டபின்னர் எத்தன்மைத்தான ஆதனம் எதுவும் எஞ்சியிருந்தால், அத்தகைய ஆதனமானது கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது; ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடையதும் அல்லது உடையனவும், அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடை செய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடை செய்யப்பட்டுள்ளனவுமான வேறு நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்கு கொடுக்கப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனத்தின் முகாமைச் சபையின் தற்றுணிபின்படி தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்